பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

50 ] சென்னை—ஞாயிறு, மார்ச்சு 23, 1947. [ விலை. அணா 2

## பாகிஸ்தான்

மகாத்மா காந்தியடிகள் பாட்னா நகரத்தில் மார்ச்சு மாதம் 11ௗ மாலையில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்திற்கு 50 ஆயிரம் ஜனங்கள் வந்திருந்தார்கள். முஸ்லீம்களும், ஏராளமாக வந்திருந்தார்கள். காந்தியடிகள் கூறியதாவது :—

"முஸ்லீம் லீக் பாகிஸ்தானை பலாத்காரத்தால் பெற்றுவிட முடியாது. இந்துக்களும், அதை பலாத்காரத்தால் தடுத்துவிடவும் முடியாது. முஸ்லீம் லீக் வாளைக் காட்டியோ கொல்வதாகப் பயமுறுத்தியோ பாகிஸ்தான் கொடுக்கும்படி கேட்டாலும் கூட பதிலுக்குப் பதில் பலாத்காரம் உபயோகியாமல் இருப்பதே உங்கள் கடமை. பாகிஸ்தானைப் பற்றி எங்களுக்கு விளக்கமாகச் சொல்லுங்கள் என்று முஸ்லிம் லீக்கிடம் கேட்பதே உங்கள் கடமை."

ஒருவர் மற்றொருவரை வைதால் மற்றவரும் வைவதில் இறங்கிவிடக் கூடாது. பதிலுக்குப் பதில் தீமை செய்வது தீமையை அதிகரிக்கவே செய்யும். பலாத்காரத்தை அதிக பலாத்காரத்தால் அணைக்க முடியாது. அகிம்சையால் தான் அணைக்க முடியும். ஆனால் அஹிம்சையின் உண்மையான பொருளை தவறாக அறிந்து கொள்ளுகிறார்கள். சில வேளைகளில் திரித்தும் கூறுகிறார்கள். யாரேனும் வைதால் மௌனமாய் இருப்பதே சிறந்த முறை. ஆனால் அஹிம்சையாக இருப்பவர் ஹிம்சை செய்கிறவர்க்கு பணிந்து விடும்படி சொல்வதாக எண்ண வேண்டாம். ஹிம்சைக்குப் பதிலாக ஹிம்சை செய்யக் கூடாது. அதே சமயத்தில் உயிரைக் கொடுத்தேனும் ஹிம்சையை எதிர்த்து நிற்க வேண்டும். கோழையாய் இருக்கக் கூடாது. கடவுள் கோழையை ஒருநாளும் மன்னிப்பதில்லை. கடவுளைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை. கடவுளுக்கு பயந்து நடக்கிறவர்கள் வேறு யாருக்கும் பயப்பட மாட்டார்கள்.

பலாத்காரத்தை உபயோகிப்பதாக பயமுறுத்தி என்னிடம் பாகிஸ்தான் கொடுக்கும்படி, கேட்டால் நான் உடனே பதிலுக்குப் பதில் பலாத்காரத்தை உபயோகிக்க ஆரம்பிக்க மாட்டேன். பாகிஸ்தான் என்றால் என்ன என்பதை விளக்கிச் சொல்லும்படி மிகுந்த பணிவுடன் கேட்பேன். பாகிஸ்தான் கேட்பது நியாயமென்று எனக்குப் பரிபூரணமாக தோன்றினால் பாகிஸ்தான் கொடுக்க வேண்டியது நியாயம் தான் என்று எல்லோருக்கும் கோபுரத்தின் மேல் ஏறி நின்று கூற தயங்கமாட்டேன். ஆனால் பலாத்காரத்தைக் காட்டி பாகிஸ்தானைக் கேட்டால் பாகிஸ்தான் கேட்பது நியாய மென்று தோன்றாத வரை அஹிம்சாவாதி செய்யக்கூடிய தெல்லாம் அஹிம்சா முறையில் எதிர்ப்பதே யாகும்.

பீஹாரில் கஷ்டங்களுக்கு ஆளான முஸ்லீம்களுக்கு உதவி செய்வதற்காக பீஹார் சகாய நிதிக்கு தாராளமாக பணம் கொடுக்க வேண்டுமென்று நேற்று நான் கேட்டேன். முஸ்லீம் லீக்கும் நிதி வசூலித்து வருகிறார்கள். அதைக் கண்டு இந்துக்கள் தங்களுக்கு பொறுப்பு இல்லை யென்று எண்ணிவிடலாகாது. வங்காளத்தில் கலகம் நேர்ந்த காலத்தில் முஸ்லீம்கள் ஹிந்து பெண்களுடைய சங்கு வளையல்களை உடைத்து விட்டார்கள். அவற்றை வாங்கிக் கொடுப்பதற்காக காமில்லாவில் உள்ள முஸ்லீம்கள் என்னிடம் எண்ணூறு ரூபாய் கொடுத்தார்கள்.

என்னை தங்கள் பகைவனாக எண்ணும் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். ஆனால் நான் அவர்கள் எல்லோரையும் என் நண்பர்களாகவே கருதுகிறேன். அவர்களுக்கு நான் இறக்கும் வரை சேவை செய்வேன். அதனால் ஹிந்துக்கள் சகாய நிதிக்கு தாராளமாக கொடுக்க வேண்டும். நானே பணத்தை நேரில் பெற்றுக் கொள்வேன்.

வங்காளத்தில் இருந்தபொழுது வங்காளி பாஷையில் பேச முடிய வில்லையே என்று வருந்தினேன். எனக்கு வயதாய் விட்டது. ஆயினும் தினந்தோறும் அந்த பாஷையை கற்றுக் கொண்டு வருகிறேன்.

காந்தியடிகள் தம்முடைய பிரசங்கத்தை முடிப்பதற்குள்ளாக பெண்கள் அவரிடம் பணமும் நகையும் கொடுப்பதற்காக எழுந்து கூட்டமாக மேடையை நோக்கி வந்தார்கள். அதனால், காந்தியடிகள் பேச முடியவில்லை.

ஆசிரியர் அப்துல் பாரியும் தொண்டர்களும் அமைதியை உண்டாக்கினார்கள்.

அதன்பின் காந்தியடிகள் புன்னகை புரிந்துகொண்டு பணமும் நகையும் வாங்கிக் கொண்டிருந்தார். அநேக பெண்கள் கம்மல்கள் மோதிரங்கள் வளையல்கள் முதலிய நகைகளை கொடுத்தார்கள். பண நோட்டுகள் சகல பக்கங்களிலிருந்தும் பறந்துவந்து கொண்டிருந்தன. நடுவில் மறுபடியும் ஜனங்கள் எழுந்து வரவே காந்தியடிகளுக்கு கஷ்டமாய் விட்டது. அதிகமாக வேர்த்தபடியால் ஆலம்கான் என்னும் எல்லைப்புற செஞ்சட்டை தலைவர் பத்திரிகையை கொண்டு வீசிக் கொண்டிருந்தார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கான் அப்துல் காபர்கான் இப்படி முஸ்லீம்களுக்காக பணம் கொடுக்க இந்துக்கள் ஆத்திரப் படுவதிலிருந்து சீக்கிரமாக ஒற்றுமை ஏற்பட்டு விடுவது திண்ணம் என்று கூறினார்.

## பஞ்சாப் சம்பவங்கள்

மகாத்மா காந்தியடிகள் மார்ச்சு மாதம் 10-ம் தேதி பங்கிப்பூர் மைதானத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தில் கூறியதாவது :—

"பஞ்சாபில் இப்பொழுது ஜனங்கள் வெறி கொண்டு அக்கிரமங்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். முட்டாள்தனமான கோபாவேசத்தால் பாகிஸ்

அதர்மம் அணியும் ஆடை ஐஸ்வர்யம்; தர்மம் தரிப்பது தரித்திரம்—டியோக்ளிஸ்

தானே அடைந்து விடவும் முடியாது. ஹிந்துஸ்தானை காப்பாற்றி விடவும் முடியாது. அதனல் அடையக்கூடியதும் காப்பாற்றக் கூடியதும் நம்முடைய அடிமைத்தனம் ஒன்றுதான்.

இந்த கோபாவேசத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு எதற்காக இப்படி செய்கிறோம் என்பது தெரியாது. சண்டை யிடுவதின் காரணம் இரண்டு கட்சியாருக்கும் தெரியாத ஒரு விசித்திரமான சண்டை இது. இந்தியா முழுவதும் அடிமையாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில் சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்வது பயித்தியக்காரத்தனத்தின் உச்ச நிலையையே காட்டுகிறது.

இது மதத்துக்காக சண்டை யிடுவதாக இருக்குமானல் ஒவ்வொரு மதத்தாரும் தத்தம் மதத்தின் உண்மையான போதனை என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது கடமையாகும்.

அரசியல் விஷயத்துக்கான சண்டையாக இருந்தால் இரு கட்சியாரும் சண்டையிடுவதற்காக சில சட்ட திட்டங்களை அனுசரிக்க வேண்டியது அவசியமாகும்.

எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதில் கூறி இருக்கும் விஷயம் இது: இந்தச் சண்டை மதச் சண்டை இல்லையென்றால் அரசியல் சண்டையாகும். இந்துக்கள் இந்தியாவை பிரிக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனல் முஸ்லீம்கள் பிரிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அப்படியானல் இரண்டு தனி ராஜ்ஜியங்களை ஏற்படுத்த வேண்டியது தானே?

இந்தச் சண்டை மதச் சண்டையோ அரசியல் சண்டையோ எனக்கு இரண்டும் ஒன்றுதான். இப்படி இரண்டாகப் பிரித்துக்கூற விரும்புகிறவர்களுக்கு விஷயம் விளங்கவில்லை. அரசியலும் மதமும் சிருஷ்டிகளை அழிக்கும்படி அனுமதி தரவில்லை. கடவுள் எங்கும் இருக்கிறார். அரசியல் சண்டையாய் இருந்தாலும்கூட இப்படி யாதொரு குற்றமும் செய்யாத பெண்களையும் பிள்ளைகளையும் கொல்லுவது நியாயமாகுமா ?

நான் பிரார்த்தனை செய்வதாக சொல்லிக்கொண்டு அரசியல் பிரச்சாரம் செய்வதாக சிலர் குறை கூறுகிறார்கள். ஆனல் நான் அரசியலைப்பற்றிப் பேச வேண்டியது இருந்தாலும்கூட அதையும் மதத்தின் அடிப்படையிலேயே பேசுகிறேன். மனித வாழ்வையும் நடத்தையையும் தனித் தனியாக பிரித்துவிட முடியாது. உண்மையாக மதவாழ்வு வாழ்கிறவர்கள் தங்கள் செயல்களை பிரித்து பேசமுடியாது. கடவுளை வணங்குவதாக சொல்லிக்கொண்டு வேறு விதமாக நடப்பவர்கள், எல்லாமறிந்த கடவுளை ஏமாற்றி விட முடியாது.

கடவுளுடைய சட்டங்கள் இரும்பைவிட பலமானவை. அவற்றை மீறிவிட முடியாது. அதனல் நான் பிரார்த்தனை செய்யும்போது எல்லோர்க்குமாக சேவை செய்கின்றேன். கடவுள் பெயரை ஓதுவதால் மட்டுமே கடவுளை அடைந்துவிட முடியாது.

## ஊழியர்களுக்கு புத்திமதி

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 9 தேதி மாலை தம்முடைய ஜாகையில் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் மற்ற காங்கிரஸ் ஊழியர்களையும் கூட்டி வைத்துக்கொண்டு கூறியதாவது:—

"நீங்கள் முஸ்லீம்கள் இடையே உண்மையான சேவை செய்ய விரும்பினல் நீங்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு உங்களுடைய மனத்தை சுத்தம் செய்யவேண்டும். முஸ்லீம்லீக் தலைவர்கள் உங்கள் மீது குறைகூறுகிறார்கள். ஆனல் உங்களுக்கு கலகச் சமயத்தில் என்ன செய்வதென்று விளங்காமல் இருந்திருக்கலாம். அதன் காரணமாக நீங்கள் தவறுதல் செய்து இருக்கலாம்.

எதுவாய் இருந்தாலும் முஸ்லீம்கள் உங்களை நம்பும்படி செய்ய வேண்டுமானல் நீங்கள் முதன் முதலாக உங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டாக வேண்டும்."

காங்கிரஸ் தலைவர்கள் கலக காலத்தில் முஸ்லீம்களை காப்பாற்றியதாகவும் இப்பொழுது முஸ்லீம்லீக் கட்சியார் அரசியல் நன்மை பெறும்பொருட்டு இப்படி குறை கூறுவதாகவும் கூறினர்கள்.

அதற்கு காந்தியடிகள் கூறியதாவது :—

"காங்கிரஸ்காரர்கள் புகழ் தரக்கூடிய காரியங்கள் செய்தது உண்மைதான். ஆனல் தவறாக நடந்தவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டாலன்றி எந்த விதமான நல்லசேவையும் செய்யமுடியாது."

அதன்பின் காங்கிரஸ் ஊழியர் ஒருவர் எழுந்திருந்து விஷயமறியாமல் தவறுதல் செய்துவிட்டேன் என்று காந்தியடிகளின் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். அதைக் கேட்டு காந்திடியடிகள் அளவிலாத ஆனந்தமடைந்தார். அதன்பின் முஸ்லீம்களுக்கு தங்களிடம் நம்பிக்கை உண்டாகும்படி செய்வதற்கு காங்கிரஸ் ஊழியர்கள் எப்படி சேவை செய்யவேண்டும் என்பதை விளக்கிச் சொன்னர்.

## பஞ்சாப் பிரிவினை

காந்தியடிகள் பாட்னவில் மார்ச்சு மாதம் 11-ந் தேதி மாலை நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்திற்கு 50 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் வந்திருந்தார்கள். பரிபூரணமான நிசப்தம் நிலவாதபடியால் காந்தியடிகள் எவ்வளவு உரத்துப் பேச முடியுமோ அவ்வளவு உரத்துப் பேச வேண்டியதாயிற்று. அப்பொழுதும் கூட அநேகரால் கேட்க முடியவில்லை. ஹிந்து முஸ்லிம் வேற்றுமைப் பிரச்சனையை தீர்க்கும் பொருட்டு பஞ்சாபை பிரித்துவிட வேண்டுமென்று கூறும் யோசனையை குறித்து காந்தியடிகள் கீழ் கண்டவாறு பேசினர்:—

"பஞ்சாபில் வகுப்பு வாத கலகங்கள் ஏற்பட்டு இருப்பதைக்கொண்டு பஞ்சாபை இரண்டாக பிரிக்க வேண்டுமென்றும் அதே காரணத்திற்காக வங்காளத்தை இரண்டாக பிரிக்க வேண்டும் என்றும் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. பிரிவினை செய்வதால் எந்தப் பிரச்சனையும் தீர்ந்துவிட முடியாது. இப்படி பஞ்சாபை பிரிக்க வேண்டுமென்று சொன்னல் பீஹாரையும் மற்ற மாகாணங்களையும் பிரிக்க வேண்டியதாகவே ஏற்படும். இறுதியில் ஹிந்து சமூகத்தையும் பிராமணஸ்தான் அச்சுதஸ்தான் என்று பிரிக்கவேண்டுமென்று கேட்கக்கூடும். பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் முஸ்லீம்களுக்கு மட்டுமே கேடு செய்ததாக எண்ண வேண்டாம். அவர்கள் ஹிந்துக்களுக்கும் ஹிந்துஸ்தான் முழுவதற்கும் சேர்த்தே கேடு செய்திருக்கிறார்கள். வகுப்பு வாத கலகங்கள் தேசத்தின எந்தப் பகுதியையும் சுத்தமாக செய்து விடாது. அது பாகிஸ்தானை தந்து விடவும் முடியாது. நவகாளியில் உள்ள முஸ்லீம்கள் ஹிந்துக்களைக் கொன்று தங்களுக்கு இழிவு தேடிக்கொண்டால் பீகாரிலுள்ள ஹிந்துக்களும் அது போல் நடந்து தங்களுக்கும் தங்கள் தேசத்திற்கும் இழிவு தேடிக்கொள்ள வேண்டிய அவசிய மில்லை. நவகாளியிலும் இங்கும் நான் பார்த்தவை யாரையும் கண்ணீர் விடும்படி செய்யும். ஆனல நான் அழமாட்டேன். நான் அழுதால் கஷ்டப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்கள் கண்ணீர் விடுவதை தடுக்க முடியுமா? இந்துக்கள் தாங்கள் செய்த தவறுதல்களுக்கு தக்க பிராயச்சித்தமும பரிகாரமும் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். பிரிட்டிஷார் பிரத்தியட்சவாதிகள். அதனல் இந்தியாவில் அரசால்வதால் லாப மில்லை என்று கண்ட

வுடன் இந்தியாவை விட்டு வெளியேறி விட தயங்கவில்லை. இதுதான் பிரிட்டிஷ் சரித்திரத்தில் சர்வ சாதாரணமாக காணக் கூடிய விஷயமாகும்.

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறுவது நிச்சயம். அப்படி அவர்கள் வெளியேறினால் அப்பொழுது நாம் செய்ய வேண்டிய கடமை யாது? ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டும் அடிமைத் தனத்தை சாஸ்வதமாக்கிக் கொண்டும் நம்முடைய தாய் நாட்டை ஹிந்துஸ்தான் என்றும் பாகிஸ்தான் என்றும் பிராமணஸ்தான் என்றும் அச்சுதஸ்தானம் என்றும் துண்டு துண்டாக பிரித்து விடுவதும் தான் நம்முடைய கடமையா? வங்காளத்திலும் பீகாரிலும நடந்தவைகளையும் பஞ்சாபிலும் எல்லைப்புறத்திலும் நடந்து கொண்டிருப்பவைகளையும் விட பெரிய பைத்தியக்காரத்தனம் வேறு உண்டா?

நாம் மனிதத் தன்மையை மறந்து பழிக்குப்பழி வாங்கலமா? விஷயமறியாதவர்கள் கோவிலை அசுத்தப் படுத்தவோ விக்கிரகங்களை உடைக்கவோ செய்ய எண்ணி விட்டதால் இந்துக்களும் பழிவாங்கும் பொருட்டு மசூதியை அசுத்தப்படுத்த எண்ணலாமா? அப்படிச் செய்து விட்டால் இந்து கோவிலும் இந்து மதமும் காப்பாற்றப்பட்டுவிடுமா? நான் விக்ரகத்தை வணங்குகிறவன். முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவர்களும் விக்ரகத்தை வணங்குகிறவர்களே ஆவார்கள். அறிகுறி வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் உண்டு. முஸ்லீம்களுடைய மசூதிகளும் கிருஸ்தவர்களுடைய சர்ச்சுகளும் உண்மையிலே இந்துக்களுடைய கோவில்களைப் போன்றவைகளே அல்லவா?

## பிராயச்சித்தம்

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 13ந் தேதி பாட்னுவுக்கு சமீபத்திலுள்ள ஒபிதுல்லா என்ற கிராமத்துக்கு சென்று பிரார்த்தனை கூட்டம் நடத்தினார். போகும் வழியில் கிராம வாசிகள் சாலையில் இரு புறங்களிலும் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு காந்தியடிகளை தரிசனம் செய்தார்கள்.

சுமார் பதினாயிரம் ஜனங்கள் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். காந்தியடிகள் ஏற்படுத்தி உள்ள பீகார் சகாய நிதிக்காக ஒரு பணப்பை காந்தியடிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பணப்பையுடன் அநேக கிராம வாசிகள், கை எழுத்திட்ட ஒரு கடிதமும் கொடுக்கப்பட்டது. அந்தக் கடிதத்தின் சாரம் இது:—

“இந்தப் பகுதியில் உள்ள ஜனங்கள் சமீபத்தில் பீகாரில் நடந்த அக்கிரமங்களுக்காக வெட்கப்படுகிறார்கள். அச்சமயம் தாங்கள் செய்த பாபங்களுக்காக பச்சாதாபப்படுகிறார்கள். இனிமேல் அத்தகைய காரியங்களை செய்யா திருப்பதற்கு வேண்டிய நல்ல அறிவை கொடுக்குமாறு கடவுளை பிரார்த்திக்கிறார்கள்”

அதன் பின் காந்தியடிகள் தாம் வரும் வழியில் பர்ஸா என்னும் கிராமத்தில் முஸ்லீம்களுடைய வீடுகள் நாசமாக்கப்பட்டிருப்பதை பார்த்ததாக குறிப்பிட்டு கூறியதாவது:—

“பீகாரில் உள்ள ஜனங்கள் எப்பொழுதும் சாந்தமாய் இருப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் இப்படி வெறி கொண்டிருப்பதை காண ஆச்சரியமாய் இருக்கிறது. பீகார் மாகாணம் நவகாளியில் நடந்த அட்டூழியங்களுக்காக பழி வாங்கியது என்று யாரேனும் சொன்னால் பழி வாங்கும் விதம் இது அன்று என்று வற்புறுத்தி கூறுவேன். இந்தியர்களில் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை பகைவர்களாக கருதும் மனப்பான்மை தற்கொலை செய்யும் மனப்பான்மையாகும். அது நாம் அடிமையாகி இருப்பதை சாஸ்வதமாக்கவே உதவும். இறுதியில் அத்தகைய மனப்பான்மையானது நாட்டின் சுதந்திரத்தைவிட, சொந்த ஊரின் சுதந்திரத்தையே பெரிதாக மதிக்கும்படி கூட செய்துவிடும். இந்தியாவில் எந்த இடத்தில் அக்கிரமம் நடந்தாலும் ஒவ்வொருவரும் அதற்கு பொறுப்பாளி என்னும் உணர்ச்சியை ஒவ்வொரு இந்தியரும் தம்மிடத்தில் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒவ்வொருவரும் அக்ரமம் நடந்தால் பொறுப்பேற்றுக்கொண்டு அதை நீக்க பாடுபட வேண்டும். அப்படி செய்யாவிட்டால் பஞ்சாபில் நடைபெறும் சம்பவங்களைப் போன்ற சம்பவங்களே நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

பஞ்சாபில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பீகாரை விட்டு பஞ்சாபுக்கு வரும்படியாக அழைப்புக்கள் வந்திருக்கின்றன. ஆனால் நான் எங்கு போனாலும் சேவை செய்ய முடியும் என்ற தற்பெருமை எனக்கில்லை. பீகாரிலும் வங்காளத்திலும் சகோதர வகுப்பார் இருவர் இடையிலும் நட்பையும் சமாதானத்தையும் ஏற்படுத்தவும் அது முடியாவிட்டால் இறக்கவுமே தீர்மானித்து இருக்கிறேன். ஆதலால் இரண்டு சமூகத்தாரும் என்றைக்கு நண்பர்களாகி என்னுடைய சேவையை வேண்டாமென்று சொல்லுகிறார்களோ அன்றைக்குத்தான் நான் இங்கிருந்து கிளம்ப முடியும்.

நான் பஞ்சாபுக்கு போக முடியாவிட்டாலும் என் சொல் அந்த மாகாணத்திலுள்ள இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் எட்டுமென்றும் அவர்கள் தங்களை ஆட்கொண்டுள்ள அறிவு சூனியமான காட்டுமிராண்டித் தனத்தை கை விட்டுவிடுவார்களென்றும் நம்புகிறேன்.

முஸ்லீம்களிடமிருந்து கொள்ளை யடிக்கப்பட்ட பொருள்களை எல்லாம் அவரவர்களுக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இந்துக்கள் தாங்கள் இடித்து தள்ளிய வீடுகளை எல்லாம் பழுது பார்த்து முஸ்லிம்கள் மறுபடியும் சீக்கிரமாக வந்து தைரியமாக வாழும்படி செய்ய வேண்டும். நான் பார்த்த கிராமங்கள் ஆபாசமாய் இருக்கின்றன. கிராமவாசிகள் எல்லோரும் பாதைகள் செப்பனிடவும் பள்ளங்களை நிரப்பவும் அந்த இடங்களில் ஜனங்கள் பொழுபோக்குவதற்காக பார்க்குகள் ஏற்படுத்தவும் வேண்டும். அதாவது குப்பமேடுகளாக இருக்கும் இடத்தை குடி இருக்கத் தக்க இடங்களாக மாற்ற வேண்டும். இந்த வேலையை வெறிகொண்டு அழித்த முஸ்லிம் கிராமங்களில் ஆரம்பம்செய்யலாம். முஸ்லிம்களை முன்போல வாழச் செய்யும் வேலை சர்க்காருடையது என்று எண்ண வேண்டாம். அது முற்றிலும் உங்களுடைய பொறுப்பே யாகும். சர்க்கார் சகல விதத்திலும் இந்த விஷயத்தில் உதவி புரியவே செய்வார்கள். நீங்கள் செய்தது தவறு. அதைநீங்களேதான் சரி செய்ய வேண்டும். நீங்கள் ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் அனைவரும் சென்று பாழாக்கப்பட்ட முஸ்லிம்களுடைய வீடுகளை புதிதாக கட்ட உதவி செய்ய வேண்டும். முஸ்லிம் சகோதரர்களை திரும்ப வரும்படி செய்வதற்கு வேறுவழி கிடையாது. முஸ்லிம்கள் திரும்ப வருவதற்கு தைரியம் கொள்ளும்படியான நிலைமையை நீங்கள் உண்டாக்க வேண்டும்.

நீங்கள் செய்த பாபங்களுக்காக பிராயச்சித்தம் செய்ய வேண்டும். நீங்கள் பிராயச்சித்தம் செய்ய தயாராக இல்லாவிட்டால் சுதந்திரம் சீக்கிரத்தில் வரப்போவதில்லை. பிரிட்டிஷார் போய்க்கொண்டு இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அதை வைத்து உண்மையாகவே சுதந்திரம் வந்து விட்டதாக சொல்ல முடியாது. நமக்குள் சகோதர உறவு ஏற்பட்டால்தான் உண்மையான சுதந்திரம் கைகூடும்.”

பிறர் நலங்கண்டு மகிழார், பிறர் துயர் கண்டு இளகார், இவர் எல்லோரும் இறந்துபடுக—போப்

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மார்ச்சு 23, ஞாயிறு 1947


## பலாத்காரம் பலன் தராது

காந்தியடிகள் கஸ்ருப்பூர் என்னும் கிராமத்தில் பிரார்த்தனைப் பிரசங்கம் செய்தபொழுது கூறியதாவது :—

“பீகாரில் இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்ந்து வந்தார்கள். அது போலவே மறுபடியும் வாழும்படி செய்வதற்காகவே நான் இங்கே வந்திருக்கிறேன். இதற்கு முன் வேற்றுமைகளும் சச்சரவுகளும் ஏற்பட்டதுண்டு. ஆனால் இருவரும் பிரிந்திருக்கும்படியான நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருப்பதுபோல இதற்கு முன் ஏற்பட்டதில்லை. இப்பொழுது பயங்கரமான காரியங்கள் நடந்திருக்கிறன. ஆனால் நாம் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதையே கவனிக்க வேண்டும்.

இரண்டு காரியங்கள் செய்யலாம். ஒருவரைஒருவர் அடித்துக்கொள்ளும் முறையை பஞ்சாப் கையாண்டு வருவதாக தெரிகிறது. மற்ற முறை பரிபூரணமான அஹிம்சா முறையாகும். பஞ்சாபில் பலாத்காரத்தைக்கொண்டு அமைதியை உண்டாக்கி விடலாம். ஆனால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதர சகோதரிகளாக வாழமாட்டார்கள். அதற்குமாறாக சண்டையும் சச்சரவும் மனக்கசப்புமே அதிகமாகும். ஆகவே பலாத்காரத்தை ஒரு பொழுதும் பலாத்காரத்தால் ஒழித்துவிட முடியாது. அஹிம்சையினால்தான் அதை சாதிக்க முடியும்.

பீகாரிலுள்ள ஜனங்கள் 1917-ம் வருஷத்தில் சாம்பரான் ஜில்லாவில் அஹிம்சையை அனுஷ்டித்துவெற்றியடைந்தார்கள். அந்தக் காலத்தில் இயக்கத்தை நடத்திய விவசாயிகள் வெள்ளைக்கார முதலாகளிடம் வெகு அடக்கத்துடன் அஹிம்சையை அனுஷ்டித்த போதிலும் அவர்களுடைய அஹிம்சை பலவீனர்களுடைய அஹிம்சையாகவே இருந்தது. இப்பொழுது இந்தியர்களே சகோதரர்கள் என்பதை மறந்து சண்டையிட்டுக் கொண்டிருப்பதால் அத்தகைய அஹிம்சை இப்பொழுது பயன்படாது. பலவான்களுடைய அஹிம்சைதான் இப்பொழுது பயன்படும். அத்தகைய அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டுமானால் முதன் முதலாக செய்ய வேண்டிய காரியம் பச்சாதாபப்படுவதாகும். ஆனால் அது வெறும் விளையாட்டாக இல்லாமல் உண்மையாக இருக்க வேண்டும். நாம் தவறு செய்து விட்டோம், நஷ்டப்பட்டவர்களுக்கு பரிகாரம் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி உண்மையாகவே மனதில் உண்டாக வேண்டும்.

நீங்கள் உங்கள் மனதை சோதித்து பார்க்க வேண்டும். நான் கூறுவதற்காக எதையும் செய்துவிடக்கூடாது. நீங்கள் ஆரஅமர யோசித்தபின் அஹிம்சா முறையே சரி என்று உங்களுடைய அறிவுக்கும் ஆன்மாவுக்கும் தோன்றுமானால் அப்பொழுதே உங்கள் முஸ்லிம் சகோதரர்களுக்கு நீங்கள் பரிகாரம் செய்ய முன் வர வேண்டும்.

நீங்கள் மனத்தை சுத்தம் செய்தால்தான் உங்கள் பாவங்கள் உங்களை விட்டு அகலும். நீங்கள் நன்னெறியில் நிற்பதற்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் அருளுமாறு கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் கடவுளைத் தவிர மற்றவர்களுக்கு ஏன் பயப்பட வேண்டும்? நீங்கள் கடவுளுக்கு மட்டும் பயப்படுபவர்களாக ஆகிவிட்டால் நீங்கள் சகோதரர்களாக ஆகிவிடுவீர்கள். அப்படி ஆக முடியுமானால் நீங்கள் பீகாரை மட்டுமல்ல இந்தியா முழுவதையும் அடைந்துவிடுவீர்கள்.”

## பிரிட்டிஷ் உதவி வேண்டாம்

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 14-ந்தேதி மாலையில் பாட்னாவிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள கஸ்ருபூர் என்னும் கிராமத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பஞ்சாப் சம்பவங்களைப் பற்றி கீழ்கண்டவாறு கூறினர் :—

பஞ்சாபில் சீக்கிரமாக அமைதியை ஏற்படுத்தாவிட்டால் அது 1857-ம் வருஷத்தில் நடந்த சம்பவம் பரவியது போல பரவிவிடும். அந்தக் காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்கள் அந்தக் கலகத்தை அடக்குவதற்காக அநேக மக்களை கொன்றுவிட்டார்கள். அதன் பிறகு அவர்கள் தேசத்தில் பள்ளிக்கூடங்கள் ஆஸ்பத்திரிகள் போன்ற பல உபயோகமான காரியங்களை செய்தார்கள். அப்படி அவர்கள் செய்தும்கூட அவர்களை வெளியேறிவிடும்படி இந்தியர்கள் கூறுவதின் காரணமென்ன? சொந்த ஆட்சியையும் சொந்த சர்க்காரையும் விரும்புவதே காரணமாகும். அதுபோல பஞ்சாபிலும் ராணுவத்தின் உதவியை கொண்டு அமைதியை ஏற்படுத்தி விடலாம். ஆனால் அது உண்மையான அமைதியாக இருக்குமா?

பிரிட்டிஷார் இல்லாவிட்டால் இன்னும் பலர் இறந்துபோய் இருப்பார்கள் என்று கூற வேண்டி இருந்தால் அது என்றென்றைக்கும் வெட்ககரமான காரியமாய் இருக்குமல்லவா?

கடவுள் எனக்கு சக்தியளிப்பாரானல் நான் எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றியடைவேன். அல்லது உயிர் துறப்பேன். நான் இறப்பது பீகாரிலோ சேவா கிராமத்திலோ குஜராத்திலோ டெல்லியிலோ எங்கு நிகழ்ந்தாலும் எனக்கு எல்லாம் ஒரேமாதிரிதான். இந்த இடங்களெல்லாம் இந்தியாவிலுள்ள இடங்களே. நான் எகிப்திலோ இங்கிலாந்திலோ இறந்தாலுங்கூட நான் வருந்த மாட்டேன். அந்த நாடுகளையும் நான் என்னுடைய தேசமாகவே கருதுகிறேன். என்னுடைய உடலை சுடாமல் புதைத்தாலும் நான் வருந்த மாட்டேன். மண் மண்ணோடு சேர வேண்டியதுதானே. ஆனால் நான் ஒரு பக்கத்தில் நவகாளி பீகாருக்காகவும் மற்றொரு பக்கத்தில் பஞ்சாபுக்காகவுமே நான் வருந்துகின்றேன்.

## முஸ்லிம்களுக்கு உறுதி மொழி

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 15-ந்தேதி பாட்னாவில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் தாம் அன்று பிற்பகல் பீகார் கவர்னரைக் கண்டு பேசிய விஷயத்தை குறித்து கீழ்கண்டவாறு கூறினர் :—

“நான் கவர்னரைப்பார்த்து வந்த விஷயத்தை குறித்து அறிய நீங்கள் ஆசைப்படுவீர்கள். நான் கவர்னருக்கு நட்புமுறையில் மரியாதை செலுத்த போனேனே அன்றி ஏதேனும் உதவி கேட்பதற்காக போக வில்லை. ஜனங்களுடைய பிரதிநிதியாகிய மந்திரிசபை இருக்கும் பொழுது ஏதேனும் உதவி வேண்டுமானல் கவர்னரிடம் போக வேண்டிய அவசியமில்லை. அதை நான் மந்திரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும். சிறுபான்மையோர் சம்பந்தமாக கவர்னருக்கு அதிகாரங்களிருப்பது உண்மைதான். ஆனல் அவைகளையும் கூட அவர் வெகு அடக்கத்துடனேயே உபயோகிக்க வேண்டியவர் ஆவார். நான் கவர்னரிடம் பேசிக் கொண்டிருந்த விஷயங்களை கவர்னர் மந்திரிகளிடம் கூறுவார். ஒரு விஷய மட்டும் நான் உங்களுக்கு கூற முடியும். “ஜனங்களுக்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் முதலில்

தங்களையே திருத்திக் கொள்ள வேண்டும்; அப்படித் தங்களை திருத்தி கொள்ளா விட்டால் அவர்கள் உண்மையான சீர் திருத்த வாதிகளாகவும் ஜனங்களின் ஊழியர்களாகவும் இருக்க முடியாது'' என்று கவர்னர் சொன்னார். அது எனக்கு ஆச்சரியமாகவும் திருப்தியாகவும் இருந்தது.

நான் மந்திரிகளுக்கு கட்டளையிடுவதற்காக இங்குவரவில்லை. யாருக்கும் கட்டளை இடுவது எனக்கு பிடிக்காத காரியம். மந்திரிகள் எனது பழைய நண்பர்கள். அவர்கள் இதற்கு முன் என்னிடம் வேலை வாங்கி இருக்கிறார்கள். இப்பொழுதும் வேலை வாங்கலாம். என்னைக்கண்டு அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. சென்ற மூன்று நாட்களாக கிராமங்களுக்கு போய் வருகிறேன். இந்துக்கள் முஸ்லிம்களுக்கு எந்த விதமான தீங்கும் செய்ய மாட்டார்கள் என்று நான் உங்கள் சார்பாக முஸ்லிம்களுக்கு உறுதிமொழி கூறி வருகிறேன். நீங்கள் அவ்விதமாக நடக்க உறுதி பூண்டால் முஸ்லிம்கள் கிராமங்களுக்கு திரும்பி வருவார்கள். ஆனால் நீங்கள் அந்த உறுதிமொழிப்படி நடக்கத் தவறி விட்டால் என்ன நிகழும் என்பதைக் குறித்து நினைப்பதற்கு கூட பயமாய் இருக்கிறது. நான் நவகாளியில் செய்வதாக எடுத்துக் கொண்ட வேலையை செய்து முடிப்பதற்கு முன்னதாகவே நான் இங்கு வந்து விட்டேன். ஆனால் நான் இங்கே செய்யும் வேலை நவகாளிக்கும் நன்மையாகவே யிருக்கும். நீங்கள் வங்காளத்துக்கும் நவகாளிக்கும் பஞ்சாபுக்கும் வழிகாட்டுபவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

## காந்தியடிகளின் சத்யாக்கிரகப் போர்கள்

(தென்னாப்பிரிக்காவில்)

1. 1906 செப்டம்பர் 11-ம் தேதி

ஜொகானஸ்பர்க்கில் ஆரம்பம்

தென்னாப்பிரிக்கா சர்க்கார் ஆசியாவிலிருந்து குடி-ஏறி இருப்பவர்களுடைய உரிமைகளை குறைப்பதற்காக 1906 ஆகஸ்டு 22 ந் தேதி ஒரு சட்டத்தை டிரான்ஸ்வால் சர்க்கார் கெஜட்டில் பிரசுரித்தார்கள். இந்தியர்களுடைய பிரதிநிதிகள் 3000 பேர் 1906 செப்டம்பர் 11 ந் தேதி ஜொகானஸ்பர்க்கில் மகாநாடு கூடி அந்தச் சட்டத்தை அஹிம்சா முறையில் எதிர்ப்பதாக கடவுள் சாட்சியாக சபதம் பூண்டு கொண்டார்கள். அப்படியே சாத்வீக சட்ட மறுப்பு போர் ஆரம்பிக்கப்பட்டது. காந்தியடிகள் உள்பட [illegible]00 பேர் சிறை தண்டனை அடைந்தார்கள். அதன் மேல் 1907 ஜனவரி 30 ந்தேதியன்று சர்க்கார் தலைவர் ஜெனரல் ஸ்மட்ஸ்க்கும் சத்யாக்கிரகத்தலைவர் காந்தியடிகளுக்கும் இடையில் சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தியர்கள் தாமாகவே பதிவு செய்து கொண்டால் சட்டத்தை ரத்து செய்வதாக ஸ்மட்ஸ் உறுதி கூறினார்.

2. 1908 ஆகஸ்டு 16 ந் தேதி

ஜொர்கானஸ் பர்க்கில் மறு ஆரம்பம்

ஸ்மட்ஸ் தாம் கொடுத்த வாக்குறுதிப்படி நடக்கவில்லை. அதனால் சத்யாக்கிரஹம் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டது. 1908 ஆகஸ்டு 16 ந் தேதி ஜொகனஸ்பரக்கில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஸ்திர வாச சர்டிபிகேட்டுகள் 2000 தீக்கு இரையாக்கப்பட்டன. சத்யாக்கிரகிகள் சிறைவாசம் அபராதம் போன்ற கஷ்டங்களுக்கு ஆளானார்கள். சுரங்கங்கள் உள்ள பிரதேசங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் கசையடியும் அதிகமாக நடந்தன.

3. 1913 அக்டோபர் 28 ந் தேதி

மாகாணத்தை விட்டு வெளியேறல்.

காந்தியடிகள் இந்திய மக்களை நேட்டால் மாகாணத்திலுள்ள நியூக்காஸில் என்னும் ஊரிலிருந்து டிரான்ஸ்வால் எல்லையை கடந்து கூட்டிக்கொண்டு சென்றார். சுரங்கங்களில் வேலை செய்த 6000 இந்தியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். நூற்றுக்கணக்கான இந்தியர்கள் சத்யாக்கிரஹம் செய்து சிறை சென்றார்கள். 2037 ஆண்களும் 127 பெண்களும் 75 குழந்தைகளும் சர்க்காருக்கு அறிவித்து விட்டு டிரான்ஸ்வால் மாகாணத்துக்கு அணிவகுத்து செல்ல ஆரம்பித்தார்கள். அவர்களும் அவர்களுக்கு தலைமை வகித்த காந்தியடிகளும் கைது செய்யப்பட்டார்கள். தற்காலிகமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார். கடைசியாக சக்தியாக்கிரஹமானது ஜெனரல் ஸ்மட்ஸுடன் கடிதப் போக்குவரத்து நடத்திய பின் 1916 ஜனவரி 21ந் தேதியன்று நிறுத்தப்பட்டது. ஆள் வரியை ரத்து செய்யும் இந்திய சகாய சட்டம் 1919 ஜுலை மாதத்தில் சட்ட சபையில் நிறைவேறியது. அதன் காரணமாக இந்திய மக்களுக்கு அவர்கள் கேட்ட கோரிக்கைகள் எல்லாம் அநேகமாக கிடைத்துவிட்டன.

(தொடரும்)

## தாவர நெய் என்று ஏமாற்றுதல்

மத்திய மாகாண சர்க்கார் தாவர நெய் விற்பனையின் மீது கட்டுப்பாடுகள் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்களா என்று மத்திய மாகாண சட்டசபையில் சில நாட்களுக்கு முன் சுகாதார மந்திரி டாக்டர் ஹஸானிடம் கேள்வி கேட்டபொழுது அவர் கூறினார்:— ''சுத்தமான தாவர நெய் விற்பனையை தடுப்பதோ விலையை அதிகப்படுத்துவதற்காக அதன் மீது வரி விதிப்பதோ ஜனங்களின் சுகாதாரத்திற்கு உகந்ததில்லை என்று சர்க்காருக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.''

இந்தச் செய்தியை பத்திரிகையில் படித்து நான் மிகுந்த ஆச்சரியமடைந்தேன். சில வாரங்களுக்கு முன் தான் மகாத்மா காந்தியடிகள் ஹரிஜன் பத்திரிகையில் வனஸ்பதி என்னும் தாவர நெய் உற்பத்தியை அழுத்தமாகக் கண்டித்து எழுதியிருந்தார். பொது ஜனங்களை நெய் என்று கூறி பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்குவதாகவும் கூறியிருந்தார். விஞ்ஞான ரீதியாகப் பார்த்தாலுங்கூட தாவர நெய் தேக சுகத்திற்கு கேடு செய்கின்றதென்பது சந்தேகத்திற்கிடமின்றி இப்பொழுது நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் சுகாதார மந்திரி இது எவ்வளவு மோசமான விஷயம் என்பதை உணராமலிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

சென்ற வருஷம் பங்களூரில் விஞ்ஞான காங்கிரஸ் வார விழா கொண்டாடப்பட்டது. அப்பொழுது பல டாக்டர்கள் தாவர நெய்யைப்பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்தார்கள். அவைகளில் சிலவற்றை கீழே தருகிறேன்.

''விழா நடந்தபொழுது தாவர நெய்யின் போஷணை சத்தைப்பற்றிய பிரச்னை நன்றாக ஆராயப்பட்டது. தாவர நெய்யில் போஷணை சத்து உண்டா இல்லையா என்பதைப்பற்றி அதிகார பூர்வமாக டாக்டர்கள் கூறாமலிருப்பதால் ஜனங்கள் தாவர நெய்யை அதிகமாக தட்டுத் தடையின்றி உபயோகிப்பது தேச மக்களின் ஆரோக்கியத்திற்கு அபாயம் விளைவிப்பதாக இருக்கிறது. தாவர நெய் நாளுக்கு நாள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வந்த போதிலும் அதன் போஷணை சத்தைப்பற்றிய தகவல் வெகு குறைவாகவே கிடைக்கிறது என்று சென்னை ஆசிரியர் தாமோதரம் கூறினார். தங்கள் தொழிலை பாதிக்கும் என்ற காரணத்தால் அந்தத் தொழிலை நடத்தும் முதலாளிகள் தாவர நெய்யைப்பற்றி சில விஷயங்களை மறைத்து வைக்க சதி செய்திருக்கிறார்கள்.

ஆயினும் இந்த தேசத்திலுள்ள சில விஞ்ஞானிகள் தாவர நெய்யில் எவ்வளவு போஷணை சத்து இருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் அக்கறை உள்ளவர்களாயிருப்பது ஆறுதல் அளிக்கின்றது. விவாதத்தில் கலந்து கொண்ட டாக்டர் வி. என். பட்டுவரதன் தாவர நெய்யை மிருகங்களுக்குக் கொடுத்தால் அவைகளுடைய வளர்ச்சியும் சந்தான விருத்தியும் பாதிக்கப்படுவதாகக் கூறினார். அவர் எலிகளுக்கு வேறு கொழுப்பு எதுவும் கொடுக்காமல் தாவர நெய்யை மட்டும் கொடுத்து ஆராய்ச்சி செய்தார். அந்த எலிகளுடைய குட்டிகள் சிறியதாக இருக்கும்பொழுதே இறந்து விட்டன. ஒன்றிரண்டு இறக்காமல் இருந்தாலும் அவைநன்றாக வளர்வில்லை. அவர் பலவிதமான கொழுப்புக்களை ஆராய்ந்து பார்த்தபொழுது வளர்ச்சி, சந்தான விருத்தி, பால் கொடுத்தல் முதலிய சகல அம்சங்களிலும் வெண்ணெய்யே எல்லாவற்றிலும் சிறந்தது என்று கண்டார். தாவர எண்ணெய்யை அப்படியே உபயோகியாமல் தாவர நெய்யாக மாற்றி உபயோகிப்பதால் எவ்வித விசேஷ நன்மையும் ஏற்படுவதாயில்லை. அதுமட்டு மன்று. தாவர நெய்யால் ஏற்படும் தீமைகள் தாவர நெய் உண்ட மிருகங்களின் இரண்டாவது, மூன்றாவது தலைமுறை சந்ததிகளைக் கூட பாதிக்கின்றன என்று தெரிகிறது.

தாவர எண்ணெய்யைத் தாவர நெய்யாக்குவதற்காக உபயோகிக்கப்படும் முறைகளால் தாவர எண்ணெயிலுள்ள் முக்கியமான வைட்டமின்கள் என்னும் ஜீவ சத்துக்களும் கொழுப்புள்ள புளிநீர்களும் வளர்ச்சிக்கு வேண்டிய வேறு சில சத்துக்களும் இல்லாமல் போய்விடுகின்றன. இந்திய விஞ்ஞான சங்கத்தில் திருமதி. டீஸூஸா என்பவர் தாவர நெய்யைப் பூச்சிகளுக்குக் கொடுத்து ஆராய்ச்சி செய்தபோதும் மேற்கண்ட உண்மைகளையே கண்டார்.

இப்பொழுது ஜனங்கள் தாவர நெய்யை அளவிற்கு மிஞ்சி உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அது வெண்ணெய்யிலிருந்து செய்யப்படும் நெய்யை விடத் தாழ்ந்தது என்பது மட்டுமன்று. உண்பவர்க்கு கட்டாயமாகத் தீமை செய்வதுமாகும். விவாதத்தில் கலந்து கொண்ட விஞ்ஞானிகள் எல்லோரும் ஏக மனதாகக் கூறிய முடிவு இது :—

கூடுமானால் வெண்ணையை உண்ணுங்கள். அது முடியாவிட்டால் தாவர எண்ணெய்களை உண்ணுங்கள். தாவர நெய்யைத் தொடாதீர்கள்.''

தாவர நெய் உற்பத்தியானது முதலாளிகள் ஏழைகளைக் கெடுத்து வாழும் மோசமான முறைகளில் ஒன்றாகும். கால தாமதமின்றி அதன் விற்பனையைத் தடுக்க வேண்டிய அவசியத்தைக் காங்கிரஸ் மந்திரி சபைகள் உணர வேண்டிய காலம் வந்து விட்டது. தாவர நெய் உற்பத்தியை இந்த நிமிஷமே தடுத்து விட வேண்டும். தாவர நெய் ஆரோக்கியத்திற்கு நல்லதென்று எண்ணும்படியாக ஜனங்களை ஏமாற்றும் விளம்பரங்களைத் தடுக்க வேண்டும். நெய் வாங்கி உபயோகிக்க முடியாதவர்கள் இந்தப் போலி நெய்யை வாங்கி உபயோகியாமல் சுத்தமான தாவர எண்ணெய்யையே உபயோகிக்க வேண்டுமென்று கூற வேண்டும். ஆதலால் பொது ஜன அரசாங்கங்கள் இந்த விஷயத்தில் ஜனங்களுக்கு அறிவு புகட்ட வேண்டியது அவசியமாகும். விஷயமறிந்த ஜனங்களும் சமூகத்திற்குச் செய்யும் இந்தப் பெரிய பாதகத்தை எதிர்த்துத் தங்கள் அபிப்பிராயத்தை பலமாக கூறவேண்டும்.

எஸ். என். அகர்வால்.

## அமெரிக்க மருந்துகள்

சென்ற அக்டோபர் மாதத்திய ரீடர்ஸ் டைஜட் என்னும் பத்திரிகையில் திரு. லாவார் என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதைப்பற்றி அந்த சஞ்சிகையின் பத்திராகாசிரியர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

"நம்முடைய தென் அமெரிக்க நண்பர்கள் நாம் அவர்களுக்கு அபாயகரமானதும் ஏமாற்றுவதுமான மருந்துகளை விற்கக் கூடாதென்று கூறுகிறார்கள்."

இதுவரை அமெரிக்காவில் பிரிட்டிஷ் சர்க்காரால் ஸர் பட்டம் கொடுக்கப்பட்ட ஒரு இந்தியர் நம்முடைய பிரதிநிதியாக இருந்து கொண்டிருந்தார். இப்பொழுது ஜனங்களின் பிரதிநிதியான திரு. அஸப் அலி அங்கே நம்முடைய ஸ்தானிகராக இருந்து வருகிறார். உண்மையான டாக்டர்கள் நல்லதென்று ஒப்புக்கொள்ளாத மருந்துகளை விற்கக் கூடாதென்று அமெரிக்க சர்க்கார் தடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த மருந்துகளோ நம்முடைய நாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்க சர்க்கார் நமக்கு வருவதையும் தடுத்து தங்கள் நாட்டினரைப் பாதுகாப்பது போலவே நம்முடைய நாட்டினரையும் பாதுகாக்கும்படி நம்முடைய ஸ்தானிகர் உடனேயே செய்வாரென்று நம்புகிறோம். நம்முடைய நாட்டில் அந்த மருந்துகளைப் பற்றிய விளம்பரங்களும் விற்பனையும் அதிகமாயிருப்பதால் அவற்றைக் கண்டு ஏமாந்து போகாமல் இருக்கும்படி நம்முடைய ஜனங்களுக்குக் கூறவேண்டியது அவசியமாகும்.

இப்படி விலக்க வேண்டிய மருந்துகளி லொன்று மென்டாக்கோ என்பதாகும். அந்த மருந்தில் பொட்டாசியம் அயோடைட் என்னும் வஸ்து இருப்பதால் அதை பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் க்ஷய ரோகிகளுக்கும் கொடுக்கக்கூடாதென்று அமெரிக்காவில் விற்கும் மெண்டாக்கோ மருந்து பாட்டில்களில் லேபில் எழுதி ஒட்டியிருக்கிறது. ஆனால் தென் அமெரிக்காவில் விற்கும் பாட்டில்களில் அவ்வித லேபில் காணப் படுவதில்லை. அதனால் நம்முடைய நாட்டில் விற்கும் பாட்டில்களிலும் அந்த லேபில் இருக்காதென்பது நிச்சயம். மெண்டாக்கோ தவிர ஸிஸ்டாக்ஸ், பார்மோட், வைடாப்ஸ்வைர நாக்ஸ், ரோஜனு, ஸெரீஜன் என்ற மருந்துகளும் தீயன என்றும் அவைகளைப் பற்றிய விளம்பரங்களில் காணப்படும் விஷயங்கள் பொய்யானவையென்றும் அமெரிக்க சர்க்கார் மருந்து இன்ஸ்பெக்டர்கள் கூறுகிறார்கள். இவைகளைப் போன்ற தீய மருந்துகள் இன்னும் எத்தனையோ உள.

திரு. லாவார் கூறியுள்ள இந்த உண்மைகள் திடுக்கிடச் செய்வனவாக இருக்கின்றன. அயோக்கியத்தனமான மருந்து உற்பத்தியாளர்களுடைய தவறான முறைகளை வெட்டவெளிச்சமாக விளக்குகின்றன.

அமெரிக்காவில் ஒரு பெரிய மருந்து உற்பத்திச் சாலைக்கு பென்ஸிலின் மருந்து உற்பத்தி செய்யும்படி அமெரிக்க ராணுவ இலாகா காண்ட்ராக்ட் கொடுத்திருந்தது. ஆனால் அந்த உற்பத்திச் சாலை உற்பத்தி செய்த பென்ஸிலின் மருந்தை சர்க்கார மருந்து உத்தியோகஸ்தர்கள் பரிசோதனை செய்து நல்லவையில்லையென்றும், கொல்லக்கூடு மென்றும் அபிப்பிராயம் கூறினார்கள். ஆயினும் அந்த அபாயகரமான வஸ்துவின் பாட்டிலின் மீது "ஏற்றுமதிக்கு மட்டும்" என்று எழுதி ஒட்டி அதை தென் அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அங்குள்ள ஆஸ்பத்திரிகளும் டாக்டர்களும் விஷயமறியாமல் அதை ஏராளமாக வாங்கி உபயோகித்தார்கள்.

அமெரிக்க சர்க்கார் மருந்து இன்ஸ்பெக்டர்கள் ஆஸ்பத்திரிக்கு வேண்டிய பான்டேஜ் துணிகளை

பரிசோதனை செய்து நோய்க் கிருமிகள் இல்லாமல் செய்யப்படவில்லை என்று அபிப்பிராயம் கூறினார்கள். அத்தகைய துணிகள் தென் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டன.

சிக்காகோவிலுள்ள ஒரு மருந்து உற்பத்தியாளர் கர்ப்பச்சிதைவு செய்யக்கூடிய ஒரு மருந்தை உற்பத்தி செய்கிறார். அபாயகரமானதென்று அமெரிக்க சர்க்கார் அதன் விற்பனையைத் தடுத்துவிட்டார்கள், அந்த உற்பத்தியாளர் இங்கிலீஷில் எழுதிய லேபில்களைக் கிழித்துவிட்டு ஸ்பானிஷ் பாஷையில் எழுதி ஒட்டி தென் அமெரிக்காவிற்கு அனுப்பி ஏராளமான லாபம் அடைந்து வருகிறார்.

இந்தியாவில் மருந்து வாங்குகிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய சர்க்கார் இத்தகைய பொய்யான மருந்துகளின் இறக்குமதியைத் தடுக்க வேண்டும். மாகாண சர்க்கார்கள் டென்மார்க் அரசாங்கத்தார் செய்வது போலப் பத்திரிகைகளில் பேட்டென்ட் மருந்துகள் எதையும் விளம்பரம் செய்யக் கூடாதென்று கண்டிப்பாகச் சட்டம் இயற்ற வேண்டும்.

வி. ஜி. டி.

## நிர்மாணத் திட்டம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் 1947 மார்ச்சு 7 ம் தேதி நடந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்:—

“ அலகாபாத்தில் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களும், காரியதரிசிகளும், அகில இந்தியா கிராமக் கைத்தொழில்ச் சங்கம், அகில இந்தியச் சர்க்கா சங்கம், தாலிமி சங்கம், ஆகியவைகளின் பிரதிநிதிகளும் மகாநாடு கூடி ஏகமனதாக நிர்மாணத் திட்டத்தைப்பற்றி நிறைவேற்றிய தீர்மானத்தைக் காரியக் கமிட்டியார் அங்கீகரிப்பதோடு இப்பொழுது நியமிக்கப்படும் நிர்மாணத் திட்டக் கமிட்டியார் சொல்லுகிற யோசனையின்படி பொதுக் காரியதரிசிகள் அந்தத் தீர்மானத்தை அமுல் நடத்தி வைக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறார்கள்.

காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் பொது ஜனங்களுக்கும் நிர்மாண வேலை சம்பந்தமாக யோஜனை சொல்வதற்கும் வழி காட்டுவதற்கும் காரியக் கமிட்டியார் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய ஒரு நிர்மாணத் திட்டக் கமிட்டியை நியமிக்கிறார்கள்:—

திரு. சங்கரராவ்தேவ் திரு. பிரபுல்லசந்திரகோஷ் திரு. ஜுகால் கிஷோர் திரு. ஜெய்ராம் தாஸ் தௌலத்ராம் திரு. திவாகர் திரு. ஜே. ஸி. குமரப்பா திரு. ஜாஜுஜி திரு. அரியநாயகம் திருமதி. சுசேதா கிருபளானி சர்க்கா சங்கத்தின் பிரதிநிதி கிராமக் கைத்தொழில்ச்சங்கத்தின் பிரதிநிதி தாலிமி சங்கத்தின் பிரதிநிதி.

மேற்கூறிய மூன்று பிரதிநிதிகள் தவிர மற்ற அங்கத்தினர்களில் ஒவ்வொருவரும் நிர்மாணத் திட்டத்தில் கண்ட சில குறிப்பிட்ட விஷயங்களை கண்காணித்து வரவேண்டும்.

நிர்மாணத் திட்டக் கமிட்டியார் மூன்று மாதத்திற்கொருமுறை தங்கள் வேலைகளைப்பற்றியும் நிர்மாணத் திட்டம் அடைந்து வரும் முன்னேற்றத்தைப்பற்றியும் அறிக்கை தயாரித்து காரியக் கமிட்டியாரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

நிர்மாணத் திட்டக் கமிட்டியார் அவ்வப்பொழுது வகுக்கும் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்காக அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பு முழுவதையும் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் எலலாம் வழங்கிவர வேண்டும். ”

## அகில இந்திய ரேடியோவின் பாஷைக் கொள்கை

சில வருஷங்களாக அகில இந்திய ரேடியோவில் ஹிந்தி சம்பந்தமாக ஒரு தகராறு நேர்ந்திருப்பதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். பண்டிதர்களுடைய ஹிந்தியை உபயோகிக்க வேண்டுமென்று ஒரு கட்சியாரும் பண்டிதர்களுடைய உருதுவை உபயோகிக்க வேண்டுமென்று மற்றொரு கட்சியாரும்கூறி வருகிறார்கள். பண்டிதர்களுடைய ஹிந்தியை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்பட்ட சங்கமான சாஹித்ய சம்மேளனம் அகில இந்திய ரேடியோவை பகிஷ்கரிக்கக்கூட செய்தது. இப்பொழுது இந்த வேதனை தரும் விஷயத்தில் இடைக்கால சர்க்கார் ஒரு ராஜ தந்திர மிகுந்த அறிவான முடிவைச் செய்திருப்பதால் இந்த அநாவசியமான தர்க்கம் இத்துடன் முடிவடைந்துவிடும் என்றும் அகில இந்திய பாஷையாக வுள்ள இந்துஸ்தானி அகில இந்திய ரேடியோ மூலம் வளர்ச்சி யடையுமென்றும் நம்புகிறோம். இந்த அகில இந்திய பாஷையினிடம் பக்தியுள்ளவர்கள் சர்க்கார் இப்பொழுது வகுத்துள்ள பாஷைக் கொள்கையை கண்டு சந்தோஷமடைவார்கள். அவர்கள் வகுத்துள்ள கொள்கையை கீழே தருகின்றோம்:—

“ இந்துஸ்தானி பாஷைக்கு என்ன மொழிகளை உபயோகிக்கலாமென்பது குறித்து ஆலோசனை சபையார் கீழ்க்கண்ட அடிப்படைத் தத்துவங்களை ஏக மனதாக சிபார்சு செய்திருக்கின்றார்கள். அவற்றை சர்க்கார் ஒப்புக்கொள்கிறார்கள்.

(1) ஹிந்துஸ்தானி பாஷையின் அடிப்படையாக உள்ள மொழிகள் எங்கிருந்து வந்தபோதிலும் அவைகளையே, தனியாக உபயோகிப்பதற்கும் புது மொழிகளை சிருஷ்டிப்பதற்கும் இயன்ற மட்டும் உபயோகிக்க வேண்டும்.

(2) அடிப்படை மொழிகள் தேவைக்கு போதுமானதாக இல்லாதிருந்தால் நம் நாட்டு மொழிகளையே உபயோகிக்க வேண்டும்.

(3) நம் நாட்டு மொழிகளை உபயோகிக்கும்பொழுது எல்லோருக்கும் பொருள் விளங்கக்கூடிய மொழிகளையே உபயோகிக்க வேண்டும்.

ஹிந்துஸ்தானி மொழிகளை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் செய்ய வேண்டியது யாதெனில் இந்துஸ்தானிக்காக ஒரு ஆலோசனைக் கமிட்டியை நிரந்தரமாக நியமிக்கவேண்டும். அந்தக் கமிட்டியார் அகில இந்திய ரேடியோ உபயோகிக்கும் அகராதியிலுள்ள மொழிகளுக்கு தகுந்த இந்துஸ்தானி மொழிகள் இவை என்று யோசனைகூற வேண்டும். அத்துடன் அந்த அகராதியை திருத்தியமைப்பதற்கும் அகில இந்திய ரேடியோ மூலம் ஹிந்துஸ்தானி உபயோகத்தை அதிகரிப்பதற்கும் வேண்டிய யோசனைகளை அந்தக் கமிட்டியார் அகில இந்திய ரேடியோ டைரக்டர் ஜெனரலுக்கு சொல்வார்கள். அந்தக் கமிட்டி அமைப்பை தனியாக சர்க்கார் வெளியிடுவார்கள்.

பண்டிதர்களுடைய ஹிந்தியை ஆதரிப்பவர்களுக்கும் பண்டிதர்களுடைய உருதுவை ஆதரிப்பவர்களுக்கும் இடையில் நடைபெறும் தர்க்கத்தால் இந்துஸ்தானி பாஷை அழிந்துவிடக் கூடாதென்று அகில இந்திய ரேடியோவை கேட்பவர்களில் பெரும்பாலோர் விரும்புவதாக சர்க்கார் அறிகிறார்கள். ஆதலால் பண்டிதர்களுடைய ஹிந்திக்கும் பண்டிதர்களுடைய உருதுவுக்கும் வேறுபட்ட சுலபமான ஹிந்துஸ்தானி பாஷையில் அகில இந்திய ரேடியோவில் விஷயங்களை கூறுவதற்கு ஆரம்பம் செய்ய வேண்டுமென்று சர்க்கார் கருதுகிறார்கள். ஆதலால் சில விஷயங்களை இந்துஸ்தானியில் கூறும்படியாக தீர்மானம் செய்கிறார்கள்.

ஆலோசனை சபையார் கீழ்க் கண்ட சிபார்சுகளையும் ஏக மனதாக செய்திருக்கிறார்கள். அவற்றையும் சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்கள் :—

(1) செய்திகளைத் தவிர மற்றப்படி சொல்லும் விஷயங்களை எல்லாம் ஹிந்தி, உருது இலக்கியங்களிலிருந்து தெரிந்தெடுக்க வேண்டும். அல்லது ஹிந்தி, உருது எழுத்தாளர்கள் எழுதியதாக இருக்க வேண்டும். ஆயினும் சில விஷயங்கள் ஹிந்துஸ்தானியில் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

(2) குழந்தைகளுக்கும் பெண்களுக்கு முள்ள விஷயங்கள் ஹிந்தியிலும், உருதுவிலும் தனித் தனியாக நடைபெற வேண்டும். கல்வி விஷயங்களுக்கும் அதிகமான நேரம் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

(3) கிராம வாசிகளுக்கான விஷயங்களை சொல்வதற்காக உபயோகிக்கப்படும் பாஷை கிராம வாசிகளுக்கு ஏற்றதாக இல்லை. கிராம வாசிகளுக்கு வேண்டிய விஷயங்களைப் பற்றி ஆலோசனை கூறுவதற்காக பொது ஜன ஊழியர்களைக் கொண்ட ஆலோசனை சபைகளை நியமிக்க வேண்டும். உருது கவிஞர்களுடைய கஜல்களை இசையுடன் பாடுவது போலவே ஹிந்தி கவிகளின் கவிதைகளையும் இசையுடன் பாட வேண்டும்.

(5) ஹிந்தியிலும் உருதுவிலும் விஷயங்கள் தெரிந்தெடுப்பதின் சம்பந்தமாக அகில இந்திய ரேடியோவுக்கு யோசனை சொல்ல ஒவ்வொரு பாஷைக்கும் தனியாக ஒரு நிரந்தர ஆலோசனைக் கமிட்டி நியமிக்க வேண்டும். ஹிந்துஸ்தானிக்கும் அத்தகைய கமிட்டி ஒன்று ஏற்படுத்த வேண்டும்.

(6) பாடல்களிலுள்ள ஹிந்தி பதங்களையும் உருது பதங்களையும் ஆதியில் உச்சரித்தபடி சரியாக உச்சரிக்கும் படி செய்யவேண்டும். அகில இந்திய ரேடியோவில் ஹிந்தி தெரிந்த சிப்பந்திகளும் உருது தெரிந்த சிப்பந்திகளும் போதுமான அளவுக்கு நியமிக்கப்படவேண்டும்.

(8) ஹிந்துஸ்தானி விஷயங்களை கவனித்துக் கொள்ளும் சிப்பந்திகளுக்கு ஹிந்தியும் உருதும் தெரிந்திருக்க வேண்டும்.

அகில இந்திய ரேடியோவில் வணக்கம் தெரிவிப்பது அந்தந்த பிரதேசத்தில் வழங்கிவரும் முறையில் நடைபெறவேண்டும்.

வட இந்தியாவில் பொதுவாக பேசப்படுவதும் தேவநகரி லிபியிலோ உருது லிபியிலோ எழுதப்படுவதுமான பொது மொழியே ஹிந்துஸ்தானியாகும். அதை வளர்ப்பதே சர்க்காரின் நோக்கமாகும். தேசத்தின் நன்மையை உத்தேசித்தே அந்த நோக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் செய்திருக்கும் முடிவுகள் மேற்கூறிய இரண்டு கட்சியாருக்கும் பூரணமான திருப்தியை அளிக்கக்கூடியதாக இல்லாவிட்டாலும் பொதுவான ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்படுமென்றே சர்க்கார் கருதுகிறார்கள். ரேடியோ கேட்பவர்களில் பெரும்பாலோருடைய தேவையை முன்னிட்டும் இலக்கிய ரசிகர்களுடைய தேவையை முன்னிட்டும் தேசத்தின் பொதுவான நன்மையை முன்னிட்டுமே சர்க்கார் இந்த முடிவுகளைச் செய்திருக்கிறார்கள்.''

## மத போதனை - ராணுவப் பயிற்சி - ரோமன் லிபி

காந்தியடிகள் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தைச் சேர்ந்த திரு. ஈ. டப்ளியூ. அரியநாயகத்துக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இப்பொழுது ஜனங்களுடைய மனத்தைக் கலக்கிக் கொண்டிருக்கும் இந்த மூன்று விஷயங்களையும் பற்றித் தமமுடைய அபிப்பிராயங்களைக் குறித்து எழுதியிருக்கிறார். இந்த மூன்று விஷயங்களும் நம்முடைய தேசத்தின் வளர்ச்சிக்கு ஜீவாதாரமாக இருப்பதால் அந்தக் கடிதத்தைக் கீழே தருகின்றோம் :—

காந்தியடிகளின் கடிதம் வருமாறு :—

'' தாங்கள் சிறிது நேரம் என்னிடம் வந்து பொது ஜன நன்மையான விஷயங்களை பற்றிப் பேசிக் கொண்டிருந்தது எனக்கு அதிக சந்தோஷம் அளித்தது.

கல்வி சம்பந்தமாக மௌலானா அபுல் கலாம் ஆஜாத் கூறியுள்ள அபிப்பிராயங்களைப் பிரசுரித்துள்ள 'ஹிந்துஸ்தான் ஸ்டாண்டார்ட்' என்னும் பத்திரிகையை என்னிடம் கொடுத்தீர்கள். அந்தப் பத்திரிகை மௌலானாவின் அபிப்பிராயங்களைச் சரியாகப் பிரசுரித்திருந்தால், அவருடைய அபிப்பிராயங்கள் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தின் வேலை முறைக்கு முரண்பட்டதாக இருக்கிறது என்று கூறுவேன். இந்தியா வசிப்பது கிராமங்களிலே; அன்னிய ஆட்சியின் அரண்களாகவுள்ள மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கிவிட்ட நகரங்களிலன்று.

சர்க்கார் மத போதனையைச் செய்ய முடியும் என்று நான் கருதவில்லை. மத போதனையை மதச் சங்கங்கள் தான் நடத்த வேண்டும். மதத்தையும் அறவொழுக்கத்தையும் ஒன்றாகக் கலந்துவிடக் கூடாது. அறவொழுக்கம் சகல மதங்களுக்கும் பொதுவானதென்றெண்ணுகின்றேன். அறவொழுக்கம் கற்பிப்பது சர்க்காரின் கடமையே என்பதில் சந்தேகமில்லை. மதம் என்பது அறவொழுக்கமன்று; பல பெயர்களில் கூறப்படும் மத ஆசாரங்களேயாகும். சர்க்கார் உதவியுடன் நடக்கும் மதத்தாலும் சர்ச்சாலும் நாம் கஷ்டப்பட்டது போதும். எந்த சங்கம் தன்னுடைய மதம் உயிரோடிருப்பதற்குச் சர்க்கார் உதவியை எந்த அளவிலேனும் எதிர்பார்த்து நிற்கின்றதோ அந்த சங்கத்திடம் மதிக்கக் கூடிய மதம் எதுவும் கிடையாது என்று கூறுவேன். இது எல்லோர்க்கும் எளிதில் விளங்கும் உண்மை. இதை நான் உதாரணங்கள் கொடுத்து விளக்க வேண்டியதில்லை.

ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் காணப்படும் விஷயங்களில் மற்றொன்று உருது லிபியையும் நாகரி லிபியையும் விலக்கி விட்டு ரோமன் லிபியை ஏற்படுத்துவதாகும். இந்த விஷயம் எவ்வளவு கவர்ச்சியுடையதாகவும் இந்தியப் போர் வீரர்கள் விஷயத்தில் எவ்வளவு உண்மையுடையதாகவும் இருப்பினும் ரோமன் லிபியை ஏற்படுத்துவது பெரும் பிழை என்றும் அப்படிச் செய்வது பொரிக்கும் சட்டியிலிருந்து எரியும் நெருப்பில் விழுவது போன்றதாகும் என்றும் நான் எண்ணுகின்றேன். இது சம்பந்தமாக நான் சென்ற ஜனவரி மாதம் 21-ந் தேதியன்று பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையை வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் புண்படுத்திய மூன்றாவது விஷயம் இராணுவப் பயிற்சியைப் பற்றிக் கூறியுள்ளதாகும். இது சம்பந்தமாக நாட்டினர் எல்லோர்க்கும் பொதுவாக ஒரு முடிவு செய்வதற்குரியகாலம் சமீபத்திலில்லை என்றே நான் எண்ணுகின்றேன். இல்லையானால் நாம் உலகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாயிராமல் ஒரு சாபத்தீடாகவே ஆகிவிடுவோம். தலைவர்கள் என்பவர்களை நாம் சிருஷ்டித்துவிட முடியாது. அதற்கு வேண்டிய குணங்கள் அவர்களிடம் பிறவியிலேயே அமைந்திருக்க வேண்டும். பரிபூரண சுதந்திரம் அமைக்கப்படுவதற்கு முன்னதாகவே இந்த விஷயத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டிய அவசரம் என்ன? ஆதலால் மத்திய ஆலோசனை சபையார் இந்த மாதிரியான சிபார்சு செய்வதைக் காண எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது ''

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி. சென்னை,
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.